# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2298/47 - 2022 සැප්තැම්බර් මස 22 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.09.22

*2298/47 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*அம்மடுவ சின்ன கதிர்காம எசல திருவிழா 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதியன்று சுப நேரத்தில் ஆரம்பமாகும்.*

- *ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி இரவு சுபநேரத்தில் கொடியேற்றம்.*
- *ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதியில் இருந்து 27 வரை இரவு சுபநேரத்தில் கொடியேற்றம் மற்றும் குபல் திருவிழா.*
- *ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதியில் இருந்து செத்தெம்பர் 02 ஆந் திகதி வரை தெவலை திருவிழா.*
- *செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியில் இருந்து 07 ஆந் திகதி வரை மகா. திருவிழா*
- *செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி வரலாற்று முக்கியத்துவம் மிக்க தியபோல தடாகத்தில் நீர்வெட்டுதல் உடன் எசல பெரகெர நிறைவுபெரும்.*

*2. தேவாலயத்தில் வடக்கு பக்கத்தில் தேவாலயத்தின் பின்புற பற்றையொன்று, தெற்கு நோக்கி ரன்வல அம்மடுவ வீதி, கிழக்குப் பக்கம் தேவகிரி கப்புவா அவர்களின் காணி, மேற்குப் பக்கமாக நிலமே அவர்களின் காணி என்பன எல்லைகளாக உள்ளன.*

*3. நோயாளர்கள், தொற்று நோயாளர்கள் மற்றும் இனிப்பு பண்ட வியாபாரிகள், மேலும் அன்னதானம் கொடுக்க விரும்பும் எவரும் இப்பகுதியில் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.*

*4. மாவட்ட அதிகாரியின் அனுமதி இன்றி மாடுகளோ அல்லது வேறு எவ்வித மிருகங்களோ அனுமதிக்கப்பட மாட்டாது.*

*5. திருவிழா நடைபெறும் பூமிப்பகுதியில் வாகனம் செலுத்தவோ, நடமாடவோ அனுமதிக்கப்பட மாட்டாது.*

*6. இப்பகுதியில் இருக்கும் வியாபார நிலையங்கள் ஒரு மீற்றருக்கு (குறையாமல்) குப்பை போடும் கூடைகள் வழங்கப்படும். குப்பைகளை கூடைகளில் போட்ட பின் மூடிவைக்கப்பட வேண்டும்.*

*7. தேநீர் கோப்பை, கோப்பி கோப்பை, பால் பெக்கட் போன்றவைகளை குப்பை கூடைகளில் போடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு குப்பைகளை வீசியது அதிகாரிகளின் கவனக்குறைவால் என நிரூபிக்கப்பட்டால் கட்டளையை மீறியதாக கருதப்படும்.*

*8. அதிகாரியின் மாவட்ட உத்தரவிற்கேற்ப 15, 16, 17, 18, 19 கட்டளைகளை மீறி உத்தரவாதப்படி இப்பூமிப் பகுதியில் பேக்கரி சாப்பாட்டு இடங்கள், வியாபார நிலையங்கள் நடாத்தப்படுவதை தடுக்கலாம் ; அனுமதிப்பத்திரங்ளை இரத்துச் செய்யலாம்.*


1A - G 37568 — 08 (2022/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*9. இப்பகுதியில் தொற்று நோயாளர்கள் இருப்பின் சுகாதார நிலையங்களுக்கோ அல்லது பொலிஸ் வைத்தியருக்கோ, உடனடியாக அதிகாரிக்கோ அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.*

*10. இப்பகுதியில் தொற்று நோயாளர்களை சாப்பாட்டுக் கடைக்கு அனுமதிக்கவோ விற்பனை செய்யவோ உணவு சமைக்கவோ அனுமதி இல்லை.*

*11. தொற்று நோயாளர்களை தங்கவைப்பதற்கு அனுமதி இல்லை. பொலிஸ் அல்லது சுகாதார அதிகாரிக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.*

*12. 7 ஆவது நிபந்தனையின் படி பிச்சை எடுக்கவோ, இலவசமாக உணவு வழங்கவோ அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தைத் தவிர வேறு இடங்களில் பிச்சை எடுக்கவோ, இலவசமாக உணவு வழங்கவோ இடமளிக்கப்பட மாட்டாது.*

*13. 7 ஆவது அல்லது 10 ஆவது நிபந்தனையின்படி அவ்வவ் இடங்களுக்கான பெயரையோ பெயர்ப் பலகையையோ மாற்றுவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ யாருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.*

*14. மாவட்ட அதிகாரி, சுகாதார உத்தியோகத்தர் ஆகியோருக்கு திருவிழா நடைபெறும் பூமிப் பிரதேசத்தில் குடிசை அமைப்பதற்கு அல்லது தூண் வைப்பதற்கு சட்டபூர்வமாக இடமளிக்கப்பட்டுள்ளது.*

**அனுராத ஜயகொடி,**
பிரதேச செயலாளர்,
வெலிகெபொல.

EOG *09 - 0243*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.